# கிறிஸ்துவின் வசனம்

கொலோ 3:16

(WORD OF CHRIST)

ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன்     11 கொரி 3:6     அக்டோபர் 1992.

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!.

இவ்விதழ்மூலம் உங்களை சந்திப்பதில் மிக்கமகிழ்ச்சியடைகிறேன். இந்த மூன்றாவது இதழை வெளியிடச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன இவ்விதழ் தற்போது தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டுவருகிறது. உங்கள் நண்பர்களுக்கும் வேண்டுமாயின் இன்றே ஒரு போஸ்ட் கார்டில் முகவரியை எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதம் வெளியிடப்படும் வேத அறிவுப் போட்டியில் கலந்துகொண்டு பயன் பெறுங்கள். மேலும் இவ்விதழை குறித்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடை கிருபை இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக!. ஆமென்.

ஆசிரியர்

## விசுவாசம்

(Faith)

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமாயிருக்கிறது என்று எபி 11;1ல் வாசிக்கின்றோம். நம்முடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும். காண்கிறதை நம்புவது விசுவாசமல்ல காணாததை நம்ப வேண்டும். நாம்தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் 11 கொரி 5:6 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தை ரோம 10:17 கேட்பதினாலே வரும் அவரைக் குறித்து கேள்விபடாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள் ஆகையால் இயேசு கிறிஸ்துவை கேள்விபட்டு நாம் விசுவாசிகிறோம்

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் எபி 11:6 எனதருமை சகோதரனே! சகோதரி-யே! தேவனுக்குப் பிரியமாயிருக்க வேண்டுமானல் நீ முதலாவது அவரைவிசுவாசி. அப்பொழுது தேவனுடைய மகிமையை காண்பாய் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உபதேசித்து சொன்ன எல்லாவார்த்தைகளையும் விசுவாசித்து மனந்திரும்பி கீழ்படிந்து ஏற்றுக்கொள். அப்பொழுது நீ இரட்சிக்கப்பட முடியும் இல்லையேல் உன் விசுவாசம் விருதா! என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினலே அறிக்கையிட்டு தேவன் அவரைமரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தல் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்பு உண்டாக வாயினலே அறிக்கை பண்ணப்படும். ரோம 10:9-10 எத்தியோப்பிய மந்திரியை போல் இயேசுகிறிஸ்துவை தேவனுடையகுமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று உன் வாயினாலே அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறு அப்பொழுது நீ இட்சிக்கப்பட முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரி 16:13ல் விசுவாசத்திலே நிலைத்திருங்கள் என்று கூறுவதை வாசிக்கின்றோம். அதைப்போல முற்பிதாக்களாகிய சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மை உள்ளவரென்றென்னி கர்ப்பம் தரிக்க பெலனடைந்து வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள் எபி 11:11 விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது எபி 11:30 பின்னும் நான் என்ன சொல்லுவேன்! கிதியோன், பாராக் சிம்சோன் எப்தா தாவீது சாமுவேல் என்பவர்களையும் தீர்க்கதரிசிகளையும் குறித்து நான் விவரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது விசுவாசத்தினாலே அவர்கள் இராஜ்ஜியங்களை ஜெயித்தார்கள் நீதியை நடப்பித்தார்கள் வாக்குத்தத்தங்களை பெற்றார்கள் சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள் எபி 11:32-40.... துன்பத்தையும் அனுபவித்தார்கள் என்று பார்க்கிறோம் மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க பாரமான யாவற்றையும் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு

விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். கர்த்தர் உங்கள் விசுவாசத்தையும், உங்கள் ஓட்டத்தையும் காப்பாராக! ஆமென்

★ சபையின் செய்திகள் இம்மாதம் 31ந் தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வத்தலக்குண்டில் கணவாய்பட்டி ரோடு தண்ணீர் டாங்கு சமீபம் உள்ள மார்னிங் ஸ்டார் ஆங்கில பள்ளியில் சுவிசேஷக் கூட்டம் நடைபெறும். தவறாது உங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் கலந்து கொண்டு பயன் பெறுங்கள்

பெண்களுக்கான சிறப்பு வேத பயிற்சி கூட்டம் அதே இடத்தில் இம்மாதம் 17ம் தேதி சனிக்கிழமை காலை 10 மணிக்குமேல் நடைபெறும். மேலும் விவரங்களுக்கு சகோதரி குளோரி அர்ச்சுனன் அவர்களோடு தொடர்பு கொள்ளவும்.

★ ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் யாக் 5:16
புதிதாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிவரும் நாகராஜன், மற்றும் பழனி குடும்பங்களுக்காக.
சகோதரி. ராஜம்மாள் குடும்ப பிரச்சனை தீர

★ பரிசு : சென்ற இதழின் வேத அறிவுப் போட்டியில் ஒருவரும் முதல் பரிசு பெறவில்லை.

ஆறுதல் பரிசு பெறுபவர்கள்:

Sis. ஜெய அமுதா வதிலை, Sis. LissyMol Cochin Kerala
.. ஏசுராணி அம்மாள் ஊ. புதுப்பட்டி Sis. மேரி நெய்வேலி
.. டோனி வதிலை Sis மேரி எலிசபெத் கலைவாணி வதிலை
சகோ. கனகராஜ் M. வாடிப்பட்டி E. அகஸ்டின் வதிலை

★ சென்ற வேத அறிவுப் போட்டியின் விடைகள்

1. 40 வருடம் யாத் 16:35 யாத்
2. யோசுவா யோசு 10:12.13
3. மெத்தூசலா ஆதி 5:27
4. வாரத்தின் முதல் நாள் அப் 20:7
5. அக்கினி கடலில் வெளி 20: 15
6. பர்னபா. பவுல்
7. ஒரு ஆடு
8. யோபு 36:1
9. ஆதியாகமம் 5
10. 1,189 அதிகாரங்கள்

★ வேத அறிவு போட்டி:

1. கர்த்தர் பாஷையை தாறுமாறாக்கின இடத்தின் பெயர் என்ன?
2. நகைப்பைப் பார்க்கிலும் எது நலம்?
3. வேதவசனத்தோடு கூட்டினாலோ அல்லது போட்டாலோ தேவன் எதைக் கூட்டுவார் எதை எடுத்துப்போடுவார்?
4. சபைகளில் ஸ்திரிகள் பேசலாமா
5. கிறிஸ்து எதற்கு தலையாயிருக்கிறார்?
6. வேதத்திலுள்ள மிகப்பெரிய அதிகாரம் எது?
7. வேதத்திலுள்ள மொத்த வசனங்கள் எத்தனை?
8. ஐந்து அப்பம் இரண்டு மின்களை சாப்பிட்ட புருஷர்கள் எத்தனை பேர்?
9. அக்கினியில் போடப்பட்ட மூன்று புருஷர்கள் யாவர்?
10. கோலியாத்தை வென்ற சிறுவன் யார்?

முதல் ஐந்திற்கு வேத அதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி இம் மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுதுபவர்களுக்கு பரிசு அனுப்படும்.

**பரிசுத்த வேதாகமம்**

பாதைக்கு - தீபம் சங் 119:105
பாவிக்கு - ஜீவன் ரோ 6:23
பேதைக்கு - ஞானம் நீதி 1:8
தாகத்திற்கு - தண்ணீர் யோ 7:38
பசிக்கு -அப்பம் யோ 6:48
ஆன்மாவுக்கு - கண்ணாடி யாக் 1:23

— சகோ. பீட்டர் சாலமோன் சென்னை

If undelivered please return to:

**THE EDITOR**
**Word of christ, Post Box No 5**
BATLAGUNDU. Anna Dt.

---

**For Private Circulation only**

---

Publisheed by Batlagudu church of Christ and
Printed at Shanthi Press Batlagundu-624202.